அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கைக் கடிதம்- 04/2012

எனது இலக்கம் : EST-9/LNGUE/05/0081
அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள்
அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.
2012.08.30

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
கூட்டுத்தாபனத் தலைவர்கள் அனைவருக்கும்

**அரசியலமைப்புச் சட்டம் மற்றும் சிங்கள/தமிழ்/ஆங்கில மொழிப் பயன்பாடு பற்றிய ஏற்பாடுகள்**

மேற்படி விடயம் தொடர்பில் வெளியிடப்பட்ட 2006.12.13 ஆந் திகதியைக் கொண்ட 01/2006 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்ற்றிக்கைக் கடிதம் மற்றும் 2010.09.01 ஆந் திகதியைக் கொண்ட 03/2010 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கைக் கடிதம் என்பன தொடர்பில் உங்கள் கவனத்தை ஈர்க்க விரும்புகின்றேன்.

02. அச் சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக்கும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரிசியலமைப்புச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் இணங்க அரசாங்க நிறுவனங்ளுக்கு சிங்கள/தமிழ்/ ஆங்கில மொழியில் கிடைக்கப்பெறும் கடிதங்களுக்கு அம்மொழியிலேயே பதில் அனுப்புதல் வேண்டும் என்றிருப்பினும், தமிழ் மொழியில் அனுப்பப்படும் கடிதங்களுக்கு பதில் அனுப்புகின்ற போது அம்மொழியில் பதில் அனுப்பப்படுவதில்லை என்பது தெரியவந்துள்ளது.

03. அதனால், நிறுவனம் ஒன்று அல்லது தனிப்பட்ட ஒருவர் அனுப்புகின்ற கடிதங்களுக்கு பதில் அனுப்பும் போது கீழே குறிப்பிட்டவாறு செயற்படுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

I அனுப்பப்படுகின்ற மொழியிலேயே (சிங்களம், தமிழ் அல்லது ஆங்கிலம்) பதில் அனுப்புதல்.

II பதில் கடிதத்தில் கையொப்பமிடும் அலுவலருக்கு அவ் ஊடக மொழி தொடர்பில் போதிய அறிவு இல்லாதவிடத்து, தான் அறிந்த அரசகரும மொழியில் கடிதத்தில் கையொப்பமிட்டு, கிடைத்த கடிதம் உள்ள மொழியில் மொழிபெயர்ப்பு ஒன்றை அனுப்புதல்.

III சுற்றறிக்கைகள் போன்ற பொது அறிவுறுத்தல்களை வெளியிடுகின்ற போது மும்மொழிகளிலும் வெளியிடுதல்.

பீ.பி. அபேகோன்
செயலாளர்,
அரசாங்க நிர்வாக,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.